Regstered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி — National Tamil Daily

மலர் 8 (28-2-66) இதழ் 20

விசுவாவசு மாசி 17 ஜுல்கஃபிறை 6 திங்கட்கிழமை

மின்னும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன் 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### சமுத்திர அடியில் பிளவு

லண்டன், பெப் 27

வடபசிபிக் சமுத்திரத்தின் அடியில் பிளவு ஒன்றை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். 5 கோடி வருடங்களுக்கு முன் இந்தப் பிளவு ஏற்பட்டிருப்பதாக அவர்கள் கருதுகிறார்கள்.

# அவசரகால நிலை இந்தியாவில் ரத்தாகும்?

## ஆலோசனை செய்துவருவதாய் பிரதமர் இந்திரா அறிவிப்பு

புதுடில்லி பெப். 27

இந்தியாவில் கடந்த 41 மாதகாலம் நீடித்திருக்கும் அவசரகாலநிலைமையை நீக்குவது பற்றிய பிரச்னையை நாம் விரைவில் ஆராயவிருப்பதாக பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி தெரிவித்தார்.

1962-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 8-ம் திகதி சீனத் துருப்புக்கள் இந்தியா மீது பெருந்தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து அவசரகாலநிலை அங்கு பிறப்பிக்கப்பட்டது.

உள்நாட்டு மந்திரி திரு. நந்தா அதற்குமுன் பேசுகையில், இனித் தடுப்புக் காவல் சட்டம் தேசியப் பாதுகாப்புக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இவ்விஷயம் ராஜ்ய முதன் மந்திரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

## 'கல்லூரிகள் கிராமத்தின் கண்கள்'

### வட்டுக்கோட்டை எம். பி. பேச்சு

சுழிபுரம், ஞாயிறு

'கிராமங்களிலுள்ள பாடசாலைகள், கல்லூரிகள் ஆகியன அக் கிராமத்தின் கண்களாகும். தாம் கற்றபாடசாலை, தாம் கற்ற கல்லூரி என பெருமை கொள்வதில் மட்டும் நில்லாது இன்றுஒவ்வொரு பழைய மாணவர்களும் தத்தமது பாடசாலையின் வளர்ச்சிக்காக பாடுபடுவதை நாம்அறிவோம். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றபின்னர் அதன் காவலர்களாக பெற்றோர்களும் ஆசிரியர்களும் இருந்துவருகின்றனர். இவர்களுக்கு பெருந்துணையாக பழைய மாணவர் சங்கம் இருந்துவருவது மிகவும் பாராட்டத்தக்கதாகும்' என பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் மேற்படி கல்லூரி நிதிக்காக கல்லூரிதிறந்த வெளிஅரங்கில் நடைபெற்ற கதம்ப நிகழ்ச்சியை ஆரம்பித்துவைத்து பேசுகையில் வட்டுக்கோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ அமிர்தலிங்கம்குறிப்பிட்டார் அவர்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

அரசாங்கம் தொகுதிவாரியாக பகிர்ந்து கொடுக்கும் நன்கொடைப் பணத்தின் ஒரு பகுதி இப்பாடசாலைக்கு வழங்கப்படவிருக்கிறது ஓலைக்கொட்டில்களாக காட்சியளித்த கட்டடங்கள் இன்றுநவீனமுறையில் நல்ல கட்டடங்களாக மாறிவருவதை நாம் பார்க்கிறோம். அதேபோல் இக்கல்லூரியின் கட்டடங்கள் மாற்றப்படும். இப்பாடசாலை விவசாயம் செய்வோர் மத்தியில் உள்ள பாடசாலையாக இருப்பதால் மிகவிரைவில் அரசாங்கத்

(6-ம் பக்கம் பார்க்க)

## ராதாகிருஷ்ணன்

புதுடில்லி, பெப். 27

நாட்டின் முன்னேற்றம் வெறும் கோஷங்களில் இருக்கவில்லை என்றும், கடுமையாக உழைப்பதில்தான் அது தங்கியிருக்கிறதென்றும் ஜனதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியிருக்கிறார்.

சீனாவில்

## சரித்திரத்தை மாற்றத் திட்டம்

பீகிங், பெப். 27

இளைஞரிடையே புரட்சி ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் சரித்திரத்தை மாற்றி அமைக்கும் திட்டத்தை சீன அரசாங்கம் அமுல்நடத்த விருப்பதாக அறியப்படுகின்றது.

## முன்னாள் உலக வங்கித் தலைவர்

வாஷிங்டன், பெப். 27

உத்தேச ஆசிய-அபிவிருத்தி வங்கி பற்றி ஆராயும் பொருட்டு முன்னாள் உலக வங்கித்தலைவர் யூஜின் பிளேக்கை, தாம் பல ஆசிய தலைநகரங்களுக்கு அனுப்பப் போவதாய் ஜனாதிபதி ஜோன்ஸன் தெரிவித்திருக்கிறார்.

## வீட்டிலிருந்து அபின் கைப்பற்றப்பட்டது

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கு கிடைத்த தகவலின் பேரில் பொலிசார் வல்வெட்டித்துறையில் உள்ள வீடு ஒன்றை பரிசோதித்தபொழுது அவ்வீட்டில் 4 றாத்தல் அபினைக் கண்டுபிடித்ததாக அறியப்படுகிறது. இதுசம்பந்தமாக இளையதம்பி சின்னத்தம்பி என்பவரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

## நீர் மூழ்கிகள் இடம்பெறும்

புதுடில்லி, பெப்.27

இந்திய கடற்படை தன் பழைய கப்பல்களை அகற்றிவிட்டு, நீர் மூழ்கிகளை [illegible] [illegible] என்று கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமன் கூறினார்.

## கழுத்தில் கயிறுபோட்டு பொலிஸார் இழுத்தனர்!

### சங்கானையில் சம்பவம்; பட்டினசபை கண்டனம்; எம் பி. யின் தலையீடு

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானைச் சந்தைப் பிரதான வீதியில் ஒருவரைக் கழுத்தில் கயிறிட்டுக் கட்டியிழுத்துச் சென்ற முறை பற்றியும் அவரைப் பகிரங்கமாகச் சங்கானைப் பொலிசார் அடித்து இம்சித்தது பற்றியும் சங்கானைப் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

இதுசம்பந்தமாக உடனடியாக பொலிஸ் உயர் அதிகாரி விசாரணை நடாத்த வேண்டுமெனவும் சம்மந்தப்பட்டவர்கள் தண்டிக்கப் படவேண்டும் எனவும் சபை முடிவுசெய்தது.

கூட்டத்திற்குபட்டினசபை தலைவர் திரு. சி. க. திருச்சிற்றம்பலம் தலைமைவகித்தார்.

### சம்பவம் பற்றிய விபரம்

சென்ற வெள்ளிக்கிழமை மாலை சங்கானைப் பொலிஸைச்சேர்ந்த கான்ஸ்டபிள் டபிள்யு. தர்மதாசா நிச்சாமம் என்னுமிடத்தில் ரோந்துசுற்றி வருகையில் இரண்டு முட்டிகள் லைசன்ஸ் இல்லாமல் கொண்டு சென்ற ஒருவரைக் கைது செய்தாராம். அவரை சங்கானை பொலிஸ் நிலையத்துக் குக்கொண்டுசெல்ல கான்ஸ்டபிள் கூட்டிச்செல்கையில் அவரின் மைத்துனரான பெரியதம்பி, அந்தக்கான்ஸ்டபிளிடம் வந்து பத்து ரூபாய் கொடுத்து அவரை விடுவிக்கு படி கேட்டாராம். இதற்கு கான்ஸ்டபிள் மறுக்கவே பெரியதம்பி கூச்சலிட்டு ஊரவர்களை அழைத்தாரென்றும் ஊரவர்கள்பெருந்திரளாகவந்து கான்ஸ்டபிளைச் சூழ்ந்து கொண்டு கைதுசெய்தவரை விடுதலை செய்யுமாறு கேட்டனரென்றும் அதற்கும் கான்ஸ்டபிள் மறுக்கவே. அவர்கள் கான்ஸ்டபிளை மிரட்டியதுடன் சிலர் கற்களையும் வீசி கான்ஸ்டபிள் கைதுசெய்தவரை விடுவிடுத்துக்கொண்டு சென்று விட்டனராம்.

இச்சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபிள் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்ததாகவும் இதைத் தொடர்ந்து அங்கு சென்ற பொலிஸ் கோஷ்டி வேறு பெரியதம்பி துரைராஜா, தியாகராஜா, பரராஜசிங்கம் ஆகியோரைக் கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்குக்கொண்டு சென்றனராம். கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவரை கழுத்தில் கயிறுமாட்டி பொலிஸ் ஜீப்பின் பின்னால் ஊர்மக்கள் பார்க்கக்கூடிய முறையில் கூட்டிச் சென்றதாகவும், இதைக்கண்டு ஆத்திரமடைந்த பொதுமக்கள் சங்கானைப் பொலிஸ்

(6-ம் பக்கம் பார்க்க)

## டாக்டர் நிக்ரூமா கெய்ரோ வருவார்?

பீகிங், பெப். 27

முன்னாள் கானா அதிபர் டாக்டர் நிக்ரூமா இன்று ஹாங்காங் வருவார் என எதிர்பார்க்கப்பட்டது.

கெய்ரோ விடுதிச்சாலை ஒன்றில் ஒரு முக்கிய கானா பிரதமருக்கு தங்குமிடவசதிகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாய் அவர் கெய்ரோ வருவார் என்றும் கருதப்படுகிறது.

கானாவில் காலனி ஆதிக்க வல்லரசுகள்தான் தமது வீழ்ச்சிக்குச் சதி செய்தன என நிக்ரூமா கூறினார்.

இதற்கிடையில் ஜாகர்த்தாவிலும் ஜனாதிபதி சுகர்ணோவுக்கு எதிரான உணர்ச்சிகள் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகிறது.

## 'நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர்கள் பயன்படுத்தப்படவேண்டும்'

### திரு. மல்லவாராச்சி பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள்

'எமது நாடு அபிவிருத்தி குன்றிய நாடு. இதை அபிவிருத்தியடையச் செய்வதற்கு சுறுசுறுப்பும் ஆர்வமும் அறிவாற்றலும் நிறைந்த இளைஞர்கள் தேவை. இத்தகைய இளைஞர்கள், கிராமத்திலிருந்தாலும், நகரத்திலிருந்தாலும் வடக்கிலிருந்தாலும் தெற்கிலிருந்தாலும் மேற்கிலிருந்தாலும் இது விஷயத்தில் அவர்களது ஒத்துழைப்பு பெறுவது நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக்க பயனளிப்பதாக இருக்கும்'.

இவ்வாறு யாழ்ப்பாணம் கில்னர் கல்லூரி மண்டபத்தில் நேற்று நடைபெற்ற தொழில் கல்வி மகாநாட்டில் இளைஞர்களுக்கு உரை நிகழ்த்திய ராஜாங்க அமைச்சின் உதவிக் காரியதரிசி திரு ஈ. மல்லவாராச்சி குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்குபவர்கள் மனித சக்தியின் மகத்துவத்தை இப்போது நன்குணர்ந்து வருகிறார்கள். இளைஞர்கள் வளர்ந்துவரும் ஒரு [illegible] என்று கூறவேண்டும். எதிர்

6-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகம்

இந்தக் காலத்திலே உலகத்தோடு தொடர்பில்லாமல் ஒரு மனிதனும் வாழமுடியாது. என் ஜாதி, என்மதம் என்றவெறி ஒழிய வேண்டும். காலையில் எழுந்தவுடன் 'உலகம் வாழ்க' என்று சொல்லவேண்டும். உலகம் வாழ்க என எண்ணி வழிபடவேண்டும். —திரு. வி. க


# ஈழநாடு

EELA'NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams: EELA NADU Jaffna: Phone: 839

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு மாசி மீ 17 உ (28-2-66)


## உயர்கல்வித்திட்டமும் சர்வகலாசாலைகளும்

உயர்தரக் கல்வி சம்பந்தமான புதியமசோதாவொன்றை கல்வி அமைச்சர் விரைவில் பார்லிமெண்டில் சமர்ப்பிக்க விருப்பதாகவும் இந்த மசோதாவின்படி ஐந்து புதிய சர்வகலாசாலைகளும் பதினைந்து கனிஷ்ட சர்வகலாசாலைகளும் அமைக்கப்படுமென்றும் தொழில் நுட்பக்கல்லூரியும் சர்வகலாசாலையாக்கப்படுவதுடன் பிக்குகளுக்கென தனி சர்வகலாசாலையொன்றும் அமைக்கப்படுமென்றும் செய்திகள் கூறுகின்றன. உயர் கல்வி அளிப்பதற்கும் சர்வகலாசாலை இடநெருக்கடியைத் தீர்ப்பதற்கும் எடுக்கப்படும் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதெனினும் நாட்டின் கல்விமுறைமுழுவதையும் மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதும் அவசியமாகும்.

கொழும்பில் மற்றொரு சர்வகலாசாலை அமைக்கப்படவிருக்கிறது. இதன் அமைப்பு எப்படி இருக்குமென்பதுதெரியவில்லை. எனினும் இப்போதுள்ள சர்வகலாசாலைகளின் மாணவர்களின்தொகைக்கேற்ப அவர்களின்கல்வித் தேவையைப் பூர்த்திசெய்யக்கூடியதாக இல்லை என்பதை உணர்ந்து அவற்றைச் சீர் செய்வதற்கு அரசாங்கம் முன்வந்துள்ளதைப் பாராட்டவேண்டும். சர்வகலாசாலை இடநெருக்கடியைத்தீர்க்கவும் மாணவர்களின் கல்வித்தேவையை நிறைவேற்றவும்மேலும்சில சர்வகலாசாலைகளை அல்லது சர்வகலாசாலைப் பிரிவுகளை நிறுவவேண்டுமென பலரும்பலதடவைகளில் எடுத்துக் கூறியும் குதிரைப் பந்தயத்திடலில் விரிவுரைகளுக்கு ஏற்பாடு செய்ததுடன் கல்வி அமைச்சர் திருப்தியடைந்தார். இன்று நிலைமையை அவர் உணர்ந்து கொண்டதையே இப்புதிய முயற்சி எடுத்துக் காட்டுகிறது. என்றாலும் புதிய சர்வகலாசாலைகளையும் கனிஷ்ட சர்வலாசாலைகளையும் அமைக்கும் பொழுது மாணவர் உயர் கல்விப்பிரச்னையை நல்ல முறையில் தீர்த்துள்ள வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையையும் நமது நாட்டிற்கேற்றமுறையில்உயர் கல்வி முறையை ஏற்படுத்துவதற்கு நம் நாட்டிலுள்ள கல்வி நிபுணர்களின் ஆலோசனையையும் பெறுவது பெரும் உதவியாக இருக்கும். இந்த வகையில் உயர்தர கல்விக்கென தேசிய உயர்தர ஆலோசனைச்சபை நிறுவ கல்வி அமைச்சர் திட்டமிட்டிருப்பது பாராட்ட வேண்டியதுதான். ஆனால் இன்றுள்ள கல்விமுறையில் ஆரம்பக்கல்விமுறைக்கும் உயர்தரக் கல்விமுறைக்கும் பெருப்வித்தியாசம் இருப்பதால் ஆரம்பக்கல்வி முதல் உயர்தரக் கல்வி பெறும்வரை மாணவரும் பெற்றோரும் கஷ்டத்துக்குள்ளாகாதவாறும் கல்வித்துறைக்காக அரசாங்கம் செலவிடும் பெருந்தொகையில் மிச்சப்படுத்தக்கூடியமுறையிலும் கல்வித்திட்டம் முழுவதும் நமது நாட்டின் தேவைக்கேற்ப மாற்றியமைக்கப்படவேண்டும். இதற்கு தேசியக் கல்வி ஆலோசனைச்சபை வெளிநாட்டுக் கல்வி நிபுணர்களின் ஆலோசனையையும் பெறுவதற்கும் பிரதேசவாரியான கல்வி ஆலோசனைச் சபைகளை நிறுவி அவைகளின் ஆலோசனையைப் பெறுவதற்கும் வசதி செய்வது நல்லது. கொழும்பிலுள்ள தொழில் நுட்பக் கல்லூரி சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்தப்படவிருக்கிறது. இது சிறந்த யோசனையெனினும் இன்றைய கல்வித்திட்டம் நாட்டின் திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திக்கும் தொழில் விருத்திக்கும் ஏற்ப திருத்தியமைக்கப்படும் வரையில் தொழில் நுட்பக் கல்லூரியைச் சர்வகலாசாலை அந்தஸ்துக்கு உயர்த்துவதால் உரியபயன் கிடைக்குமென எதிர்பார்க்கமுடியாது. என்றாலும் தொழில் கல்விக்கு ஊக்கமளிக்கும் வகையில் தொழில்நுட்பக் கல்லூரியைச் சர்வகலாசாலையாக்கும்போது யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரி போன்றவைகளைப் பூரண வசதியுடைய தொழில் நுட்பக் கல்லூரிகளாக்க வேண்டியது அவசியமாகும்.

உத்தேச பதினைந்து கனிஷ்ட சர்வகலாசாலைகளில் மூன்று வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிறுவப்படுமாம். இவை போதுமா? அனுராதபுரத்தில் பிக்குகளுக்கென தனிச்சர்வகலாசாலை நிறுவப்படத் திட்டமிடும் பொழுது இந்நாட்டிலுள்ள சிறுபான்மையினரின் மொழி, கலாச்சாரங்களைப்பாதுகாக்கவும் விருத்தி செய்யவும் பூரண வசதியுள்ள இரண்டு சர்வகலாசாலைகளாவது இந்த இருமாகாணங்களிலும் அமைத்தால் என்ன?

சர்வகலாசாலை இடநெருக்கடிப் பிரச்னைக்கும் உயர் கல்விப் பிரச்னைக்கும் தீர்வுகாண முயற்சி செய்யும் அரசாங்கம் இவைகளுக்குத் தற்காலிகத்தீர்வுகாண எத்தனிக்காமல் நாட்டின் கல்வித் தேவை முழுவதையும் பூர்த்தி செய்யக்கூடிய நீண்டகாலத் திட்டமொன்றை தகுந்த ஆலோசனையின்மீது தயாரிப்பது நல்லது.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

### புண்படுத்தாதீர்!

அண்மையில் கொழும்பு (வை. எம். சி. ஏ.) யினர் சென்ஜோன்ஸ் கல்லூரிமண்டபத்தில் நடத்திய ''He comes from Jaffna) என்னும் ஹாஸ்ய நாடகத்தைப் பார்க்கச் சென்றிருந்தேன். அது ஹாஸ்ய நாடகமாக மட்டும் இருக்கவில்லை. யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டைப் பழிக்கும் ஒரு கேலிக் கூத்தாகவும் இருந்தது இந்த நாடகத்தை முழு நேரமும் பார்த்துக் கொண்டு இருக்க முடியாமல் என் போன்ற சிலர் ஆத்திரத்தோடு மண்டபத்திலிருந்து வெளியேறினர். இது பல யாழ்ப்பாண மக்களின் உள்ளங்களைப் புண்படுத்துகின்றது.

இந்த நாடகத்தைப் பார்த்த தென்னிலங்கைமக்கள் பலருக்கு எங்கள் பண்பாட்டைப் பற்றி ஒரு கீழ்த்தரமான எண்ணம் தோன்றியிருக்கும் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. ஆகவே இதைஅறிந்தாயினும் இனிமேலாவது இந்த நாடகத்தை மேடைகளில் நடியாமல் விடுவார்கள் என்றுநம்புகிறேம்.

சு. சூரியவர்மன்
6, இராசசிங்கம் றோட்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு இந்நாடகத்தை நாமும் பல வருடங்களுக்கு முன் பார்த்திருக்கிறேம், யாழ்ப்பாணத்தவரில் காணப்படும் அதிசிக்கனம், ஏதிலும் சமுசயம், சுயநலம் முதலிய சில குணதிசயங்களை வைத்து நகைச்சுவையாக எழுதப்பட்ட இந்நாடகத்தில் அவர்களை இழிவுபடுத்தும் நோக்கம் இருந்ததாக எமக்குத் தோற்றவில்லை. ஒவ்வொரு இனத்தவரிடத்திலும்இப்படியான சில விசித்திர குணங்கள் இருக்கவே செய்யும். அவற்றை நாடக மேடையில் சித்தரித்துக்காட்டும் போது அவர்களோடு சேர்ந்து நாமும் நமது குறைபாடுகளைப் பார்த்துச் சிரிக்கவும் முடியுமானல் திருத்திக் கொள்ளவும், பழகிக் கொள்ள வேண்டும். நாடகத்தில் நகைச்சுவையே பிரதானம், அதில் வரும் பாத்திரங்களல்ல.

[ஆசிரியர்]

ஃ ஃ ஃ

### தொழிலநுட்ப கல்லூரி பரீட்சை

மேற்படி பரீட்சை சம்பந்தமாகச் சில மாணவர்கள், இப்பகுதியில் 13-2 66-ல் எதிமுய விடயத்தைக் கண்ணுற்றேன். அதில், 1964-65-ம்ஆண்டு தமிழ் சுருக்கெழுத்துப் பரீட்சையை இலங்கைத் தொழில்நுட்பக் கல்வித் திணைக்கள ஒழுக்கக்குழு ரத்துச் செய்து மீண்டும் அப்பரீட்சையை நடத்தியதற்கான காரணத்தைத் தங்களுக்கு அறிவிக்கவில்லை என்ற கருத்துப்பட எழுதியிருந்தார்கள். மீண்டும் நடைபெற்ற பரீட்சையை எடுத்த மாணவர்களுள் நானும் ஒருவன். முதல் நடைபெற்ற பரீட்சை ரத்துச்செய்யப்பட்டதன் காரணம் பின்வருமாறு:-

பரீட்சையின்போது பல ஊழல்கள் நடைபெற்தாகக் கூறி அப்பரீட்சை ரத்துச் செய்யவேண்டும் என்று நானும் எனது சக மாணவர்கள் சிலரும், அகில இலங்கை வர்த்தகக்கலை மன்றமும் இலங்கைத் தொழில்நுட்பக் கல்வித் திணைக்களத்தைக் கேட்டிருந்தோம். அத்துடன் பல ஆதாரங்களுடன் ஊழல்களை நிரூபித்தோம். இதன் காரணமாகவே அப்பரீட்சை ரத்துசெய்யப்பட்டு மீண்டும் ஒரு பரீட்சை நடைபெற்றது. இது மாணவர்கள் எல்லோரும் அறிந்த விடயம்.

வி. நகுலேஸ்வரசர்மா,
யாழ். தொழில் நுட்பப்பாடசாலை பழைய மாணவன்,
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

### கைத்தொழில் கல்வி

கைத்தொழிற் கல்விக்கு ஊக்கமளிக்கு முகமாக அரசாங்கம் மரவேலை, மேசன் வேலை முதலிய பலதரப்பட்ட தொழில்களில் படித்த வாலிபர்களுக்குப் பயிற்சியளித்துவருகிறது இப்பயிற்சி நிலையங்களை அவ்வப்பகுதிகளில் உள்ள தொழிற்காரியாலயங்கள் மேற்பார்வை செய்துவருகின்றன. 1963-ம், 64-ம் ஆண்டுகளில் மேற்படி பயிற்சி நிலையங்களில் ஒன்ருன கட்டிடக் கலையியல் பயிற்சி நிலையமொன்று நெல்லியடியில் நடைபெற்று அதில் நூற்றுக்குமேற்பட்டபடித்த வாலிபர்கள் வேலைபயின்றுவிட்டு இன்றுவரையில் எதுவித வேலையும் இன்றிச் சும்மாவிருக்கிறுர்கள். அரசாங்கம் கட்டிடக்கலையில்பயின்ற வாலிபர்களுக்குக் கட்டிட மேற்பார்வையாளர்கள் அல்லது கட்டிடம் சம்பந்தமான அரசாங்க வேலைகள் எதையும் வழங்கவில்லை. யாழ்ப்பாணம் தொழிற்பகுதியினரும் இது பற்றிக் கவனமெடுப்பதாகத் தெரியவில்லை. கைத்தொழிற் கல்வியைப் பயின்ற படித்த (ஜி. சி. ஈ. பரீட்சை சித்தியடைந்த) எத்தனையோ மாணவர்கள் இன்று அரசினரின் ஆதரவில்லாமல் தெருவழியே திரியவேண்டியிருக்கிறது அரசாங்கச் சார்பில் புதிதாகக் கட்டப்படும் கட்டடங்களிலோ அல்லது கட்டிடத் திட்டங்களிலோ இந்தப் பயிற்சி முடிந்த வாலிபர்களுக்கு வேலைகளை வழங்கி அவர்களின் குறைகளைத் தீர்க்க ஆட்சியாளர்களும் அவர்களுக்கு முதலாகப் பயிற்சியளித்த தொழிற் பகுதியாரும் முன்வருவார்களா? ஆறரை மாதங்கள் தகுந்த முறையில் கட்டிட ஆக்கவேலைகள்பிளான்வேலைகள் கோபுரங்கள்அமைத்தல் கிறில் வேலைகள் முதலிய பல கலைகளைப் பயின்றுள்ள இந்தப் படித்த வாலிபர்களை அரசாங்கம் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ள முன்வரவேண்டும். வேலைவாய்ப்புக்களை வழங்கும் போதும் மேற்படி கைதொழிற் பயிற்சியைமுடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் இந்த வாலிபர்களுக்குவேலைகொடுத்து அவர்களை ஊக்குவிப்பதன் மூலந்தான் அரசாங்கம் மேற்கொண்ட கைத்தொழில் அபிவிருத்திதிட்டம் நிறைவேறுமே தவிரப் பயிற்சி அளித்துவிட்டுப் பல காலமாக நடுத்தெருவில் நிற்க வைப்பதன் மூலம் ஒரு போதும் நாட்டின் கைத்தொழிலில் சுபிட்சம் காண முடியாது.

க. பேரம்பலம்,
நெல்லியடி.

ஜாகர்த்தா, பெப். 27

இந்தோனேஷியத் தலைநகர் ஜாகர்த்தாவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் தடைசெய்யப்பட்ட போதிலும், நிலைமை நெருக்கடியாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

### நாட்டிலும் நகரிலும்

பாரதப் போரின் வீர மணிகளில் ஒருவராகிய வீர தாமோதர சவர்க்காரின் மறைவோடு காந்தியப்பதத்தில் மிளிர்ந்த இன்னுமோர் நட்சத்திரம் மறைந்துவிட்டது. அகண்ட ஹிந்துஸ்தானம் அமைப்பதற்கு சவர்க்கார் வகுத்த திட்டங்களை முகம்மது அலி ஜின்னு சின்னுபின்னப்படுத்திவிட்டார். ஆயினும் சவர்க்காரின் இந்து மகாசபை ஒரு காலத்தில் காங்கிரசுக்கு பெரிய நரகத்துமுள்ளாகவும் அதன் பிரதான எதிர்க்கட்சியாகவும் விளங்கியது. பாகிஸ்தான் அமைக்கப்பட்டதோடு இந்து மகாசபை பலமிழந்து காந்திஜி சுட்டுக் கொல்லப்பட்டதும் அதன் அரசியல் வாழ்க்கையே அழிந்துவிட்டது.

இந்துஸ்தானம் துண்டாடப்படுவதை மிகத் தீவிரமாக எதிர்த்து சவர்க்காருக்கு வடஇந்திய முதலாளித்துவம் அரிய உதவி அளித்து வந்தது. ஆனல் என்ன காரணத்தினுலோ தென்னிந்தியாவில் இந்து மகாசபைக்கு எப்பொழுதுமே ஆதரவு இருக்கவில்லை. தென்னிந்திய தலைவர்களில் ஒருவரான ராஜகோபாலாச்சாரியார்பாகிஸ்தான் வழங்கப்படுவதை ஆதரித்து 'சிக்கல் தீர வழி' (த வே அவுட்) என்று ஒரு புத்தகத்தை வெளியிட்டு அதனால் காங்கிரசின் பகைக்கு இலக்காகி அதிலிருந்து வெளியேற வேண்டியும் வந்தது. இன்றும் காஷ்மீர விவகாரத்தில் ராஜாஜி காங்கிரசின் கொள்கைக்கு விரோதமாக எழுதியும் பேசியும்வருவது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் விஷயத்தில் அவருடைய தீர்க்க தரிசனம் கடைசியில் பலித்துவிட்டது. காஷ்மீர் விஷயத்திலும் அப்படி யாகுமோ?

சவர்க்காருடைய கொள்கைகள் என்னவாயிருந்த போதிலும் அவர் பாரதத்தின் சிறந்தவீரர்களில் ஒருவர் என்ததை மறக்க முடியாது.

ஃ ஃ ஃ

மாவனல்லை கூட்டுறவு மொத்த விற்பனவு டிப்போவிலிருந்து 25,000 ரூபா பெறுமதியான ஜவுளிகளை பெருச்சாளிகள் சேதப்படுத்திவிட்டன வென்று அந்த ஸ்தானத்தின் பிரதம கணக்காளர் கூறியதாக ஒரு பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. பெருச்சாளிகள் ஜவுளிகளையும் தின்னுமென்று நான் இதுவரை கேள்விப்படவில்லை எலிகள் தின்பதாகவே கேள்விப்பட்டிருக்கிறேம். எப்படியிருந்த போதிலும் கூட்டுறவு ஸ்தாபனத்தில் ஏற்கனவேயுள்ள மனிதப் பெருச்சாளிகளுடன் சாதாரண பெருச்சாளிகளும் போட்டியிடவந்துவிட்டனவே என்று தாம் எமக்கு கவலையாயிருக்கிறது. பழைய மூஷிகங்கள் மொத்த விற்பனவுஸ்தாபனத்தை மொத்தமாக அரித்துக் கொண்டு போக சிறிய பெருச்சாளிகள் சின்னச் சங்கக்கடைகளில் துள்ளி விளையாடிக் கொண்டேயிருக்கின்றன. பல நோக்கு சங்கக்கடைகளில் துணிகள் அரிக்கப்படுவதோடு விஷயம் விளங்காத ஏழைமக்களின் துணிக் கூப்பன்களும் பறிமுதல் போகிறதாம்.

சில காலத்துக்கு முன்கூட்டுறவு கடைகளுக்கு வந்த ரஷ்யத் துணி எப்படியோ சாதாரண வியாபாரிகளிடம் மொத்தமாகப் போய் சேர்ந்துவிட்டது. அவர்கள் அதை நாலு முழத்துண்டுகளாக வெட்டி அழகானகறு

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானு அதிகாரம் விரைவில் சிவில் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்படும்

## புதிய அரசியலமைப்பின் கீழ் தேர்தல்நடத்த புரட்சிசபைதிட்டம்

### நிக்ருமாவின் மந்திரி சுடப்பட்டார்

ஆக்ரா, பெப். 27

கானுவில் அதிகாரத்தை விரைவில் சிவில் அரசாங்கம் ஒன்றிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவிருப்பதாக தேசிய விடுதலைசபை அறிவித்திருக்கிறது. அதிகாரம் ஒருவர் கையிலிருக்காமல் ஜனநாயக் முறையில் மக்கள் பிரதிநிதிகளிடம் பகிர்ந்தளிக்கும் அரசியலமைப்பு நகல் ஒன்றை அது தயாரித்து வருவதாய் அறிவிக்கப்பட்டது.

இந்த அரசியலமைப்பு சம்பந்தமாக மக்களிடையே வாக்களிப்பு நடத்தப்படும் என்றும், அவர்களின் சம்மதத்தை அறிந்தபின் பொதுதேர்தல் நடத்தப்படும் என்றும் அது மேலும் அறிவித்தது.

கானுவில் நீதிபதிகள் புதிய அரசாங்கத்துக்கு புதிதாக நேற்று விஸ்வாசப் பிரமாணம் செய்து கொண்டனர்.

#### கடோகா அந்தஸ்து உயர்வு

கேர்ணல் கடோகா இப்போது மேஜர் ஜெனரலாக உயர்த்தப்பட்டிருக்கிறார். ராணுவத்தின் தளபதியாகவும் அவர் பதவி வகிப்பார்.

இதற்கிடையில் முன்னாள் ஜனதிபதி நிக்ருமாவின் ஆலோசகரை, பொலிசார் விசாரித்து வருகிறார்கள்.

#### 500 கைதிகள் விடுதலை

நேற்று மேலும் 30 அரசியல் கைதிகளை புதியதலைமை விடுதலை செய்தது. மொத்தம் இதுவரை 500 அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

புதிய ஆட்சி கானுவை பூரண கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாயும், மக்களின் ஆதரவுடன் இயங்குவதாயும் கூறப்படுகிறது.

டாக்டர் நிக்ருமாவின் ஹானோய் விஜயம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக வட வியட்னும் நேற்று உத்தியோக ரீதியில் அறிவித்தது.

பீகிங்கிலுள்ள டாக்டர் நிக்ருமாவினதும், அவரது ஆலோசகர்களினதும் நடவடிக்கை குறித்து எதுவும் சொல்ல சீனர்கள் மறுத்திருக்கிறார்கள்.

#### நிக்ருமாவுக்கு எதிர்ப்பு

கானு தலைநகர் ஆக்ராவில் மாணவர்கள் நேற்று நிக்ருமா எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இதற்கிடையில் தப்பிச் செல்ல முயன்ற நிக்ருமா மந்திரிகளில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாய்க் கூறப்பட்டது.

---

## நிக்ருமா பதவிநீக்கம்:
## ஐ. நா. வட்டாரங்கள் கருத்து

நியூயோர்க், பெப். 27

டாக்டர் நிக்ருமா பதவியிலிருந்து அகற்றப்பட்டது ஐ. நா. விலுள்ள ஆபிரிக்க பிரதிநிதிகளிடையே சங்கடத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

கடந்த சில மாதங்களில் ஆபிரிக்காவில் ராணுவப் புரட்சியால் பாதிக்கப்பட்ட எட்டாவது நாடு கானுவாகும்.

எனினும் புதிய கானு தலைவர்கள் டாக்டர் நிக்ருமாவைவிட அமெரிக்காவுடன் அதிக நேச உணர்ச்சியைக் கொண்டிருப்பதாக அமெரிக்க வட்டாரங்கள் கருதுகின்றன.

சமீப மாதங்களில் டாக்டர் நிக்ருமா கிழக்குஐரோப்பியா சார்பாக, குறிப்பாக சீன பக்கம் சாய்ந்துவந்தார் என அமெரிக்காகருதுகிறது.

ஆனல் ஆபிரிக்காவில் அடுத்தடுத்து நடைபெற்று வரும் புரட்சிச் சம்பவங்கள் ஆபிரிக்காக் கண்டத்தை ஒரு ஸ்திரமற்ற நிலையில் வைத்திருப்பதாக சில பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

டாக்டர் நிக்ருமா தற்போது சீனவிலிருப்பதால், சீனர்களுக்கு மிக இக்கட்டானநிலைவம ஏற்பட்டிருப்பதாக சில ஆபிரிக்க பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

ஆனல்சில மேற்குநாட்டுப் பார்வையாளர்கள் கானு சம்பவம் குறித்து மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆனல் ஹானேயில் என்ன நடைபெற்ற போதிலும் டாக்டர் நிக்ருமாவுக்கு கிராமப்புறமக்களிடைய அதிக செல்வாக்கு இருப்பதாகவும் அண்டைநாடு ஒன்றில் அவருக்கு இடங்கொடுக்கப்பட்டால் தனது செல்வாக்கை அவர் மீண்டும் உபயோகிக்க வாய்ப்பு உண்டு என்றும் வேறுசில பிரதிநிதிகள் கருதுகின்றனர்.

(பி. டி. ஐ.)

---

காஷ்மீரக் காட்சி

## முன்னாள் பிரதமர் பக்ஷி அரசியலுக்கு திரும்புகிறார்

ஜம்மு, பெப் 27

காஷ்மீரத்தின் முன்னாளையப் பிரதமரான பக்ஷி முகம்மது அரசியலுக்குத் திரும்புகிறார் என்பது இப்போது கிட்டத்தட்ட நிச்சயமாகிவிட்டது. அவர் காங்கிரஸ்காரராக அரசியலில் இறங்குவாரா அல்லது அவர் 1965 மே மாதம் கலைத்துவிட்ட தேசியப் பேரவைக் கட்சியை உயிர்ப்பிப்பாரா என்பது மட்டும் இன்னும் தெரியவில்லை.

பக்ஷி தேசியப் பேரவைக் கட்சியை உயிர்ப்பித்து, எதிர்க்கட்சித் தலைவராக இருந்துவருவார் என்று ஆளுங்கட்சியான காங்கிரஸ் எண்ணுவதாகத் தோன்றுகிறது. அவருக்கு அதிகாரத்துக்கு வரவேண்டுமென்ற அக்கறையில்லை என்று காங்கிரஸார் கருதுகின்றனர்.

ஜனசங்கத் தலைவரான பண்டித பிரேம்நாத் டோக்ரா, பக்ஷி காஷ்மீர அரசியலுக்குத் திரும்புவதை வரவேற்றுள்ளார். பக்ஷி ஜனசங்கத்தின் உறுப்பினராயிராமல், எதிர்க்கட்சித்தலைவர் என்ற முறையில் ஏற்றுக்கொள்ள அவர் ஆயத்தமாயிருக்கிறார்.

பக்ஷியின் திட்டங்களுக்கு ஜனசங்கத்தின் ஆதரவு முக்கியமாகும். ஸதிக் அரசாங்கத்தின்மீது தமக்கு ஏற்பட்டுள்ள ஏமாற்றத்தை ஜனசங்கத்தலைவர்கள் மறக்கவில்லை. அவர்கள் அண்மைக் காலம்வரை ஸதிக்கின் அரசாங்கத்துக்கு முழு ஆதரவு கொடுத்து வந்தனர். அரசியல்வாதி என்ற முறையில் பக்ஷியின் பெருமையைக் குலைப்பதில் அவர்களும் சேர்ந்துகொண்டனர்.

ஆட்சியிலும், பொது வாழ்க்கையிலும் ஊழல் மலிந்து வருவதால் ஜனசங்கம் ஏமாற்றமடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. ஜனசங்கம் ஆட்சிக்கு வரும் காலம் சமீபத்தில் இல்லை என்பதை அதன் தலைவர்கள் வெளிப்படையாக ஒப்புக் கொள்கின்றனர்; எனவே பக்ஷியை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவருவதில் அவர்கள் தயக்கம் காட்டவில்லை.

பக்ஷியின் திட்டங்களுக்குப் பொதுமக்களிடமிருந்து ஆதரவு கிடைத்துள்ளது. காஷ்மீரப் பள்ளத்தாக்கிலுள்ள மக்களுக்கு இன்று அரசியல் பிரச்னைகள் இல்லை. அவர்களுக்குப் பொருளாதார சங்கடங்கள்தான் ஏற்பட்டுள்ளன. ஜம்முவிலும் நிலைமை அப்படித்தான் இருக்கிறது. மக்களுக்கு எப்போதும் வேலைவாய்ப்புத் தேடித்தந்த மந்திரவாதியாக அவர்கள் பக்ஷியைக் கருதுகின்றனர். எப்போதும் சுறுசுறுப்பாக இருந்துவரும் பக்ஷி சிவப்பு நாடாவை மதிக்காமல் ஏதேனும் கட்டுமான அல்லது மறுகட்டுமான வேலையில் வெறியோடு ஈடுபடுவார். "அவர் மிகவும் துன்பப்பட்டுவிட்டார்" என்று பொதுமக்கள் பக்ஷிமீது மிகுந்த அனுதாபம் காட்டவும் தொடங்கியுள்ளனர்.

"பக்ஷியின் மேடை எதுவாக இருக்கும்?" என்பதே இப்போது கேள்வியாகஇருக்கிறது.

தேசியப் பேரவைக் கட்சிசை உயிர்ப்பிப்பதுதான் அவருக்கு ஒரேவழியாயிருக்கிறது. அக்கட்சியின் வாய்ப்பு மங்கியா இருண்டோ இருக்கவில்லை. அக்கட்சி 16 ஆண்டுகளுக்கும் அதிகமாக இம்மாநிலத்தை ஆண்டிருக்கின்றது. அது ஷேக் அப்துல்லாவின்கீழ் 1937 முதல் 1953 வரை மக்களின் அரசியற்கட்சியாக இருந்தது. பின்னர் 1953 முதல் 1963 கடைசி வரையிலும் அப்படித்தான் இருந்துவந்தது. நசரத்பால் பள்ளிவாசலில் இருந்து புனிதமுடி தற்காலிகமாக மறைந்தபோது அதன் அடிப்படையே ஆட்டங்கண்டுவிட்டது.

ஆனல் அக்கட்சி இறந்துவிடவில்லை. ஓராண்டுக்குமுன்னர் அதைக் கலைத்துவிட்டு, அதன் உறுப்பினர்கள் காங்கிரஸில் சேரவேண்டுமென்று பக்ஷி கேட்டுக்கொண்ட பிறகும் நிலைத்து நிற்கிறது.

பக்ஷி குலாம் முகம்மது தனது திட்டங்களை முறைப்படி அறிவிக்க வேண்டியதுதான்; அவரது பழைய ஆதரவாளர்களனைவரும் அவரது திட்டத்தைப் பின்பற்ற ஆரம்பித்து விடுவர். இன்று அவருக்கு ஜம்முவிலும், காஷ்மீரத்திலும் நிறைய ஆதரவுஇருக்கிறது. அவ்விரு பகுதிகளிலும்ஆர்வமாக தம்மை அர்ப்பணிக்கும் ஊழியர் படைகளும் அவருக்கு இருக்கின்றன. எவ்வளவோ நடந்திருந்தும் அவர் [illegible] தலைமையுடன் இணக்கம் கொள்ளவில்லை.

---

## புரட்சி வீரர் சவர்க்காருக்கு மக்கள் கூட்டம் அஞ்சலி

### தலைவர்கள் பாராட்டு

பம்பாய், பெப். 27

காலஞ்சென்ற புரட்சி வீரர் சவர்க்கார் மரணமான செய்தி கேட்டவுடன் ஆயிரக்கணக்கான மக்கள் அவரது இல்லத்தில் கூட ஆரம்பித்துவிட்டார்கள்.

அவர் இறந்து ஒரு மணி நேரத்திற்குள் ஜனக் கூட்டம் இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக வர ஆரம்பித்தது. நள்ளிரவுக்குப்பின்பும் ஆயிரக்கணக்கானேர் வந்து அவரது பிரேதத்தைத் தரிசித்துச் சென்றனர்.

பம்பாய் முதல் மந்திரி. பிரஜா சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், சுதந்திரா, ஜனசங் கட்சித் தலைவர்களும் அவர்களில் சிலர்.

திரு. சவர்க்காரின் பூதவுடல் இன்றுமாலை சோனுப்பூர் மின்சார மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. திரு. சவர்க்கார் உறுதிமிகு வீரர் என ஜனதிபதி ராதாகிருஷ்ணன் அவருக்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்.

இன்றைய பாரதத்தில் சிறப்பு வாய்ந்த ஒருவரை இழந்தோம் என பிரதமர் இந்திராகாந்தி கூறினார்

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு சவர்க்கார் எழுச்சியின் தூண்டுதலாய் இருந்தார் என உபஜனதிபதி டாக்டர் ஹுஸெய்ன் கூறியிருக்கிறார்.

---

## "வியட்னும் பாதை நீண்டது; கடினமானது"

### அமெரிக்க ஜனதிபதி அறிவிப்பு

வாஷிங்டன், பெப். 27

வியட்னும் சம்பந்தமான பாதை நீண்டதும் கடினமானதுமாக இருப்பதாயும், ஆனல் போர் முன்னேற்றம் பற்றித்தாம் திருத்தியடைவதாயும் அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினார்.

தென்வியட்னுமில் புது பலக் கோரிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாயும் மேலும்கோரிக்கைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

எனினும் அடுத்த சில மாதங்களுக்கு படைபல அதிகரிப்பு அங்கு இருக்காது என நம்புவதாயும் அவர் கூறினார்.

இதற்கிடையில் வியட்னும் பற்றி பாதுகாப்புசபையில் விவாதம் நடத்த இன்னும் சரியான தருணம் ஏற்படவில்லையென பாதுகாப்பு சபை அங்கத்தினர்கள் கருதுவதாக சபையின் புதிய தலைவரான ஜப்பானியப்பிரதிநிதி கூறினார்.

அதே சமயம் வடவியட்னுமில் குண்டுவீச்சை நிறுத்துமாறு அமெரிக்க வழக்கறிஞர்கள் ஜனதிபதிஜோன்ஸனுக்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். தென்வியட்னுமில் சுதந்திர தேர்தல் நடத்துவதற்கு உதவிபுரியுமாறு அவர்கள் ஐ. நா. வையும் கேட்டிருக்கிறார்கள்.

---

ராவல்பிண்டிக்கு

## இந்திய மந்திரிகள் கோஷ்டி செவ்வாய்க்கிழமை செல்லும்

### பிரயாணம் ஒருநாள் ஒத்திவைப்பு

புதுடில்லி, பெப். 27

பாகிஸ்தான் துருப்புக்கள் விலகிச்சென்ற பகுதிகளுக்கு பாரத நிர்வாக அதிகாரிகளும், துருப்புக்களும் செல்ல ஆரம்பித்துள்ளார்கள். பாகிஸ்தானியர் விலகிச் சென்ற கெம்கெரான் நகரம் பூகம்பம் ஏற்பட்ட இடத்தைப்போல் காட்சியளிப்பதாகக் கூறப்படுகிறது.

நேற்றுப் பத்திரமற்ற சண்ணி வெடிகள் உள்ள 25 பகுதிகள் ஐ. நா. பிரதிநிதிகளால் கூட்டப்பட்டது. ஐ. நா. பார்வையாளர்களும் அங்கு சென்றிருக்கிறார்கள்.

இதற்கிடையில் திரு. சுவர்ண்சிங் தலைமையில் செல்லவிருக்கும் இந்திய மந்திரிகள் தூது கோஷ்டி திங்கட்கிழமை ராவல்பிண்டிக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் ஒருநாள் ஒத்திவைக்கப்பட்டது. செவ்வாய்க்கிழமைதான் அவர்கள் செல்லவிருக்கிறார்கள். பார்லிமெண்டின் பட்ஜட் கூட்டம் இருப்பதால் அன்றைய தினம் சபையிலிருப்பதற்காகவே இந்த ஒத்திவைப்பென சுவர்ண்சிங் கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சகோதரரின் நெஞ்சில் எதிரி கிறீஸால் குத்தினர்'

## உடுவில்-மல்வத்தை கொலைவழக்கில் சாட்சியம்

மாவிட்டபுரம், ஞாயிறு "எதிரி எனது மூத்த சகோதரனை வெட்டினர். அதனால் அவர்மேல் பொலிசார்வழக்குத்தொடர்ந்தார்கள். இதனைத் தொடர்ந்து எதிரி எனது இரண்டாவது சகோதரனை கிறீஸ் கத்தியால் குத்தினர். இரண்டாவது சகோதரன் இறந்துவிட்டார். இப்போது எதிரிக்கு எதிராக இரண்டு வழக்குகள் நடக்கின்றன. எதிரி மூன்றுவதாக என்னையும் கத்தியால் வெட்டுவார் என நான் அஞ்சுகிறேன்."

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துறுபானு முன்னிலையில்தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட உடுவில் - மல்வம் கொலை வழக்கில் சாட்சியமளித்த காலம் சென்றவரின் இளைய சகோதரரான வல்லிபுரம் கத்தையாமேற் கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கில் உடுவில்மல் வந்தையைச் சேர்ந்த தவசி கந்லதயா என்பவர் அவ்வூரைச் சேர்ந்தவல் லிவுரம் ஐயன் என்பவரைச் சென்ற வருட்ம் டிசம்பர் மாதம் இரண்டாம் திகதி கிறிஸ் சைத்தியால் குத்திக் கொலை செய்ததாக சுன்னுகம் பொலிசாரல் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வல்லிபுரம் கந்தையா தொடர்ந்து சட்சியமளிக்கையில் கூறியதாவது:- "காலம் சென்றவர் எனது தமையன். அவர்வாய்பேச முடியாத ஊமை. சென்ற வருடம் மார்கழி மாதம் இரண்டாம் திகதி மாலை ஐந்தரை மணியளவில் நான் வின்சன் என்பவரின் கடையிலிருந்து வீடுநோக்கிச் சென்று கொண்டிருந்தேன். அச்சமயம் காலம் சென்ற எனது தமையனர் எனக்கு முன்னுல் சுமார் 35 யார் தூரத்தில் அவருடைய வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருப்பதைக் கண்டேன். அதே நேரத்தில் எதிரி கின்னத்துரை என்பவரின் வீட்டுவேலிக்குப் பக்கத்தில் கைகட்டிக்கொண்டு நின்ருர். காலம் சென்றவர் எதிரிக்கு சமீபத்தில்வந்ததும், எதிரி ஒரு கிறீஸ்கத்தியால் காலம் சென்றவரின் நெஞ்சில் குத்தினர். எதிரி காலம் சென்றவரின் நெஞ்சில் குத்தியதும் சின்னத்துரை என்பவரின் வளவுக்குள்ளால் ஓடிவிட்டார். காலம்சென்றவரின் நெஞ்சால் இரத்தம் பாய்ந்தது. காலம் சென்றவர் அவருடைய காயத்தைக்கையால் பொத்திக்கொண்டு தன்னுடைய வீட்டை நோக்கிஓடினர் அவர் ஓடிப் போய் அறிவுமயங்கி வீட்டு முற்றத்தில் விழுந்து விட்டார். நானும் மற்றும் இருவரும் அவரை வீட்டு விருந்தையில் தூக்கி வளர்த்திஞேம். பின்னர் நான் உடனேசைக்கிளில் போய் சுன்னுகம் பொலிசாருக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து காலம் சென்றவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போனுர்கள். அவர் அங்கு டிசம்பர் மாதம் 19-ந் திகதி காலமானுர், எதிரி காலம் சென்றவரைவெட்டியதற்கு காரணம், எதிரி காலம் சென்றவரின் முத்த தமையனுரை வெட்டி அதுசம்பந்தமாக வழக்கு நடப்பதேயாகும்.

நீதிபதி:- அப்படியானுல் எதிரி உன்னையும் வெட்டுவார் என நினைக்கிருயா?

சாட்சி:- ஆம் ஐயா. அவர் என்னையும் வெட்டுவார் எனப்பயப்படுகிறேன்.

எதிரிதரப்பு வழக்கறிஞர் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தபின் நீதிபதி மேல்விசாரணையை அடுத்த மாதம் பத்தாம் திகதிக்கு ஒத்திவைத்து அத் திகதி வரை எதிரியை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன் ஆஜராஞர், சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. பேரன். வீரசூரியாவின் உதவியுடனும் வழக்கறிஞர் திரு. எஸ். ஸ்ரீதரனின் அனுசரணையுடனும் திரு ஆர். கண்ணுத்துரை வழக்கை நடத்தினர்.

## இந்திய 'மந்திரிகள்...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா தன் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்காக பலமுனை சவாலை ஏற்றுவருவதாயும் அவர் கூறினர்.

இந்திய—பாகிஸ்தான் படைவிலக்கம் திட்டமிட்டபடி பூர்த்தி செய்யப்பட்டுவிட்டதாய் ஐ. நா பொதுக் காரியதரிசி பாதுகாப்புச் சபைக்கு அறிவித்திருக்கிருர்.

## மங்கோலியாவிற்குள் ரஷ்யதுருப்புக்கள்?

புதுடில்லி, பெப். 27

3 டிவிஷன் ரஷ்யத் துருப்புக்கள் மங்கோலியாவுக்குள் புகுந்திருப்பதாக ஊர்ஜிதமாகாத செய்திகள் கூறுகின்றன. சீனத் துருப்புக்கள் மங்கோலிய எல்லையில் குவிந்து வருவதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

## சேவை நலம் பாராட்டு

யாழ்ப்பாணம், செவ்.

நாற்பத்தொரு ஆண்டு ஆசிரிய வாழ்க்கையைமுடித்துக் கொண்டு இம்மாதம் 26-ம் தேதியிலிருந்து ஓய்வு பெற்ற துன்னலை காசிநாதர் வித்தியாலய தலைமை ஆசிரியர் பண்டிதர் க. மயில்வாகனத்துக்கு இன்று மேற்படி பாடசாலை பெற்ருேர் ஆசிரியர் சங்கம் ஒரு சேவைநலம் பாராட்டு விழாவொன்றை நடத்துகின்றது.

இவர் தமது பதவிக்காலங்களில் ஆசிரியர் சங்கங்களில் தலைவராகவும், காரியதரிசியாகவும், நிர்வாக உறுப்பினராகவும் இருந்து பணியாற்றியிருக்கிருர். கிராம முன்னேற்றச் சங்கம், ப. நோ. கூ. சங்கம் போன்ற பல சங்கங்களில் அங்கத்தவராக இருந்தும் பல பொதுச் சேவைகள் செய்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## நாஸரை கொல்ல முயன்றதாக கைது

கய்ரோ, பெப் 27

ஜனுதிபதி நாஸரைக் கொலைசெய்ய முயன்றதாயும், அரசாங்கத்தைக் கவிழ்க்க முயன்றதாயும் முஸ்லிம் சகோதரத்துவ சங்கத்தைச் சேர்ந்த மேலும் 50 பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள். இதுவரை முஸ்லிம் சகோதரத்துவத்தைச் சேர்ந்த 140 பேர் கைது செய்யப்பட்டிருக்கிருர்கள்.

## நன்றி

டாஷ்கண்ட், பெப். 27

டாஷ்கண்ட் வீதிக்கு திரு. சாஸ்திரியின் பெயர் சூட்டப்பட்டிருப்பது குறித்து இந்திய அரசாங்கம் பெக்கிஸ்தான் அரசாங்கத்துக்கு நன்றி தெரிவித்துள்ளது.

## அர்ஜண்டீனுவில் வெள்ளம்

ரியோடிஜெனிரோ, பெப். 27

வட அர்ஜண்டீனுவில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு காரணமாக ஒரு லட்சம் பேர் வீடிழந்திருப்பதாயும், 50.000 கால்நடைகளைக் காணவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது. பாதைகளும், பாலங்களும், ரயில் பாதைகளும், கட்டடங்களும் சேதமடைந்தன.

## பிரமுகர்கள் மகஜர்

புதுடில்லி, பெப். 27

நீதித்துறை நிபுணர்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், பிரமுகர்கள் ஆகிய 31 பேர், நாட்டில் நெருக்கடிநிலையை அகற்றவேண்டும் எனக்கோரி ஜனுதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் மகஜர் அனுப்பியிருக்கிருர்கள். இதில் ஒப்பமிட்டவர்களில் டாக்டர் ஸி. பி. ராமஸ்வாமிஐயர், டாக்டர் லஷ்மணசாமி முதலியார் ஆகியோரும் உள்ளனர்.

# புங்குடுதீவு மகாவித்தியாலய குறைபாடுகள்

## மந்திரிக்குபெற்றேர்ஆசிரியர்சங்கம் முறைப்பாடு

யாழ்ப்பாணம், திங்கள் புங்குடுதீவு பெற்ருர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் காரியதரிசி திரு. கே. பத்மநாதன் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் குறைபாடுகள்பற்றி வித்தியாபதிக்கு ஒரு நீண்ட கடிதமூலம் முறையிட்டுள்ளார்.

புங்குடுதீவிலுள்ள மகாவித்தியாலயம் யாழ்ப்பாணத்திலிருந்து 21 மைல்களுக்குப்பால் இருக்கின்றதென்றும், திருப்தியான முறையில் கல்விவசதிகள் இல்லாமையால் பள்ளிக்கூடத்திற்கு மாணவர்கள் குறிப்பிட்ட அளவிற்கு செல்வதில்லையென்றும் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும்படியும் இக்கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஜி. சி. ஈ. உயர்பிரிவிற்கு இப்பள்ளிக்கூடத்தில் கல்வி கற்பிப்பதற்கு அங்கீகாரம் இருந்தும் விஞ்ஞான-ஆங்கில ஆசிரியர் பற்ருக்குறையால் இவ்வகுப்புகள் நடாத்தப்படுவதில்லை என்று அவர் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்கா நிராகரிப்பு

வாஷிங்டன், பெப். 27

அணுத்தடை ஒப்பந்தத்தைஅமெரிக்கா மீறியிருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை அமெரிக்கா நிராகரித்திருக்கிறது. அணு ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் விமானங்களை நிறுத்தவேண்டும் என்ற ரஷ்ய கோரிக்கையையும் அது நிராகரித்தது. நிராகரிக்கும் குறிப்பு நேற்று மாஸ்கோவில் சேர்ப்பிக்கப்பட்டது.


7 ரூ. நிறையுள்ள கண்ணுன கண்ணன்



அவன் ஒஸ்டர்மில்க் அருந்தி ஆரோக்கியமாகவும், திடகாத்திரமாகவும் வளர்வான்




ஒஸ்டர்மில்க் சுத்தமான, தூய்மை மாருத பூரண பால் உணவு, பச்சிளங் குழந்தையின் மென்மையான ஜீரணத்திற்கு பாதுகாப்பானது. அயச்சத்தும், விட்டமின் Dயும் சேர்க்கப்பட்டிருக்கும் ஒஸ்டர்மில்க் குழந்தைகளை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் வளரச்செய்கிறது.

துவக்கத்திலிருந்தே ஒஸ்டர்மில்க் குழந்தைகள் பெலனுன சுக வளர்ச்சி பெறுகிருர்கள்.

ஒஸ்டர்மில்க்

கிளக்ஸோ—அலன்பரீஸ் சிலோன் லிமிட்டட்., தபாற் பெட்டி 23, கொழும்பு.

ஒஸ்டர்மில்க் குழந்தைப் புத்தகம் ஒன்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ள ... சத்திற்கு 10 சத முத்திரை அனுப்பவும் ... பரீஸ் (சிலோன்) லிமிட்டட் தபாற் பெட்டி 23, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மாணவர் மன்ற போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு யாழ்ப்பாணம் அரசாங்க [..]னிஷ்ட தொழில்நுட்பக் [க]ல்லூரி மாணவர் மன்றம் [நட]ாத்திய வருடாந்த [த]மிழ்க் கட்டுரை, சிறுகதை, [பே]ச்சுப் போட்டிகளின் முடி[வுக]ள் வருமாறு:

கட்டுரை (தமிழ் வணிகப் பிரிவு): செல்வன் க. பேரம்பலம், செல்வன் ச. இராசேந்திரன், செல்வி ச. மங்களேஸ்வரி.

தொழிற்பிரிவு: செல்வன் க. நாகராசா, செல்வன் ஸ்ரீ சண்முகராசா, செல்வன் எம். சிவம்.

**சிறுகதைப்போட்டி**

செல்வன் சி. கமலநாதன், செல்வன் ச. இராசேந்திரன், செல்வன் க. பேரம்பலம்.

**பேச்சுப்போட்டி**

செல்வன் ஸ்ரீ இராஜேந்திரகிருஷ்ணபிரசாத், செல்வன் க. பேரம்பலம், செல்வன் சி. கமலநாதன்.

## 'இசையும் நடனமும் இறைவனை நினைவூட்டுவன'

யாழ்ப்பாணம், திங்கள் "சைவ மக்களின் பண்பட்டுக்கும் கலாச்சார வளர்ச்சிக்கும் ஆத்ம ஈடேற்றத்திற்கும் சங்கீதம், நடனம் என்னும் கலைகள் உயிர் நாடியாக விளங்குகின்றன. சங்கீதம், நடனமாகிய கலைகள் இறைவனின் நினைவை எமக்கு உண்டுபண்ணுகின்றன. இவைகளை பிள்ளைகள் கற்பதால் பிள்ளைகளின் வாழ்வு பரிமளிக்கும். இன்று ஆரம்பமான நடனநிகேதன் பாடசாலை இவ்வூர் பிள்ளைகளுக்கு ஒரு வரப்பிரசாதமாகும்."

யாழ்ப்பாணம் நடன நிகேதன் பாடசாலையை பெருமாள் கோவிலடியில் நேற்றுமுன்தினம் மாலை அங்குரார்ப்பணம் செய்து வைத்த யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபா தலைவர் திரு. ஆர். ஸி, மன்மதராயன் மேற்கண்டவாறு கூறினார். ரசிக ரஞ்சன சபா உபதலைவர் திரு. ஸி. செல்லத்துரை, மிருதங்க வித்துவான் திரு. ஏ. எஸ். இராமநாதன் ஆகியோரும் உரைநிகழ்த்தினர். நடன கலாநிதி கோபிநாத்தின் சிஷ்யை நடனஆசிரியை திருமதி லட்சுமி அம்மாள் நடனவகுப்பை ஆரம்பித்து வைத்தார். நடனபாடசாலையை ஸ்தாபிப்பதற்கு முயற்சி எடுத்த திரு. கோவிந்தபிள்ளையைப் பலர்பாராட்டினர்.

## பக்தரின் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

உடுப்பிட்டி, ஞாயிறு கோயிலில் புகுந்த திருடர்களைக் காட்டுமாறு கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலயத்தில் உண்ணாவிரதம் இருந்தபக்தர் தமதுஉண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளார்.

# விளையாட்டுப் பகுதி

**கிரிக்கெட்**

# யாழ். மத்திய கல்லூரி வெற்றி பெற்றது

### 24 ரன்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட்டை வீழ்த்தினர் சிவசோதி

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ். இந்துக் கல்லூரிக்கும் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மத்திய கல்லூரிஒரு ஆட்டத்தினாலும் 187 ஓட்டங்களினாலும் யாழ்.இந்துக் கல்லூரியைத் தோற்கடித்தது. இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரியின் சிறந்த பந்துவீச்சு வீரரான எஸ். சிவசோதி 24 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளை எதிர் பாராதவிதமாக வீழ்த்தி ரசிகர்களின் பராட்டுதல்களைப் பெற்றார். முதலாவது ஆட்டத்தில் யாழ் மத்திய கல்லூரியே முதலில் துடுப்பெடுத்தாடியது. இதில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 340 ஓட்டங்களைவெற்றிகரமாகப்பெற்றது. இதில்வி கங்காதரன் 50 ஓட்டங்களும், சி. பேரின்பநாயகம் 18 ஓட்டங்களும், எம். ஸ்ரீபத்மநாதன் 40 ஓட்டங்களும், கே. டி. கணேசகுமார் 78 ஓட்டங்களும், எஸ். எம். ஏபிரகாம் 47 ஓட்டங்களும், ஏ. பற்குணராசா 21 ஓட்டங்களும், வி. பாலேந்திரா 30 ஓட்டங்களும், கே. சண்முகலிங்கம் 20 ஓட்டங்களும், ரி. நடராசா தனது விக்கெட்டை இழக்காமல் 5 ஓட்டங்களும் பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ். இந்துவின் பந்துவீச்சு வீரர்களான ரி. சிவசத்தியசீலன் 83 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், கே. சண்முகலிங்கம் 47 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 1 விக்கட்டுகளையும், எஸ். சிவநானந்தன் 98 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விட்கெட்டுகளையும்சிரமத்துடன் வீழ்த்தினார்கள். இதையடுத்து யாழ். இந்து தனது முதலாவது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்து சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 60 ஓட்டங்களையே இக்கோஷ்டியால் எடுக்க முடிந்தது. இதில் வி. பாலேந்திரன் 9 ஓட்டங்களும், பி. தருமரத்தினம் 4 ஓட்டங்களும், கே. சச்சிதானந்தன் 11 ஓட்டங்களும், வி. அருளானந்தன் 4 ஓட்டங்களும், வி. சின்னராசா 17 ஓட்டங்களும், ரி. கந்தசாமி 10 ஓட்டங்களும், கே. சண்முகலிங்கம் 4 ஓட்டங்களும் வெகுசிரமப்பட்டு எதிர் கோஷ்டியினரிடமிருந்து பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் யாழ் மத்திய கல்லூரியின் சிறந்த பந்துவீச்சு வீரர்களான கே. டி. கணேசகுமார் 18 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், கே சண்முகலிங்கம் 31 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினார்கள். இரண்டாவது ஆட்டத்தில் மீண்டும் யாழ். இந்துவே துடுப்பெடுத்தாடியது. இதில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 93 ஓட்டங்களைப் பெற்றார்கள். வி. பாலேந்திரன் 9 ஓட்டங்களும், வி. அருளானந்தன் 4 ஓட்டங்களும், வி. சின்னராசா 20 ஓட்டங்களும், ரி. கந்தசாமி 7 ஓட்டங்களும்' எஸ். சிவநானந்தன் 13 ஓட்டங்களும், ரி. சிவசத்தியசீலன் 10 ஓட்டங்களும்' எஸ். சிவபாலன் 8 ஓட்டங்களும், கே சண்முகலிங்கம் 5 ஓட்டங்களும்முறையேபெற்றனர். இச் சந்தர்ப்பத்தில் யாழ். மத்திய கல்லூரியின் சிறந்த பந்துவீச்சுவீரர்களான கே. கணேசகுமார் 29 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும், கே. சண்முகலிங்கம் 22 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், எஸ். சிவசோதி 24 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளையும், வெற்றிகரமாக வீழ்த்தினார்கள். இப்போட்டி யாழ் இந்துக் கல்லூரியின்விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## யு. எஸ். ராக்கெட் வெற்றி

கேப்கென்னடி, பெப். 27 அமெரிக்கா 1970-ம் ஆண்டில் மனிதனைச் சந்திரனுக்கு அனுப்பும் முதல் கட்டமாக நேற்று 'அப்பல்லோ' என்ற ராக்கெட்டை வெற்றிகரமாக வானவெளிக்கனுப்பியது. 9 நிமிடங்கள் சஞ்சரித்தபின் அது தெற்கு அட்லாண்டிக்கில் இறங்கியது.

வானத்தில் 300 மைல் உயரே 5000 மைல் அது சென்றது.

1970-ல் 3 மனிதர்களைச் சந்திரனுக்கு அனுப்ப அமெரிக்கா எதிர்பார்க்கிறது.

## புதன்கிழமை அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

பம்பலப்பிட்டி, ஞாயிறு ஜனவரி 8-ந் திகதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பாதுகாப்பு ஒழுங்குகள் பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட நிரந்தரக் காரியதரிசிகளைக் கொண்ட விசேஷ குழுவின் அறிக்கை எதிர்வரும் புதன்கிழை அரசாங்கத்திற்குச்சமர்ப்பிக்கப் படவிருக்கிறது.

இந்தச்சபையின்முன் தற்பொழுது கட்டாய லீவில் இருக்கும் திரு. எஸ். ஏ. திஸநாயகாவும், திரு. ஐ. டி. எம். வான்ருவெஸ்டும் சாட்சியம் அளித்திருந்தனர்.

## தமிழ்நாடு பட்ஜட்

சென்னை, பெப். 27 1966—67-ம் ஆண்டுக்கான தமிழ்நாடு பட்ஜட்டை முதன்மந்திரி திரு. பக்தவத்சலம் சட்டசபையில் சமர்ப்பித்தார். புதிய வரி எதுவும் விதிக்கப்படவில்லை.

புதிய பட்ஜட்டின்படி வருமானம் 188 கோடியே 72 லட்சம். செலவு 188 கோடியே 41 லட்சம். மிச்சம் 31 லட்சம் ரூபாய்.


## வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியில் நாவலர் ரோட்டு—அத்தியடி ரோட்டு சந்தியில் ஒரு துண்டு நிலமும் அதிலுள்ள 264-ம் இலக்கக் கடையும் தளபாடங்களும் விற்பனைக்கிருக்கிறது. விபரங்களுக்கு சு இரத்தினசிங்கம், 91, பெரிய தெரு, யாழ்ப்பாணம். 1981

திறமான, புதுப்பித்த டயர்கள், கார், லொறி, டிரக்ரர், முதலான வாகனங்களுக்குரிய சகல அளவிலும் விற்பனைக்கு இருக்கிறது. சிற்றி ரையர் ஸ்ரோர்ஸ், No. 6. ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 1969

**கல்வி**

இலங்கையின் தரமுயர்ந்த தபால்மூலம் கல்வி ஜி. ஸி. ஈ. சாதாரணம் / உயர்தரம். ஜி. ஏ. கியூ. / பி. ஏ. 22 ஸ்கொலசிப்புகள் வழங்கப்படும். ஐக்கியகலாசாலை, நெல்லியடி / கரவெட்டி. 1883


# சென். ஜோன்ஸுக்கு அமோக வெற்றி

### 18 ரன்கள் நஷ்டத்துக்கு 5 விக்கட் வீழ்த்தினர் தெய்வேந்திரா

யாழ்ப்பாணம், திங்கள் யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி ஸ்கந்தவரோதயாக் கல்லூரியை அதிக சிரமமின்றிப் தோல்வியடையச்செய்தது.

இதற்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் தெய்வேந்திரா என்றும் அவர் 18 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளை வெற்றிகரமாக வீழ்த்தினர். முதலில் சென். ஜோன்ஸ் கல்லூரியே தனது முதலாவது ஆட்ட துடுப்படி விளையாட்டை ஆரம்பித்தது, சென். ஜோன்ஸ் சகல விக்கட்டுகளையும்இழந்து மொத்தம் 276 ஓட்டங்களைப்பெற்றது. இதில் சூரியகுமார் 76 ஓட்டங்களையும், ஜெயநாயகம், 50 ஓட்டங்களையும், சிவகுமார் 27 ஓட்டங்களையும், தெய்வேந்திரா 12 ஓட்டங்களையும், முத்துத்தம்பி 14 ஓட்டங்களையும், ஞானக்கோன் 39 ஓட்டங்களையும். ராஜதுரை 27 ஓட்டங்களையும், அல்போன்சஸ் 18 ஓட்டங்களையும் முறையே பெற்றனர். இச்சந்தர்ப்பத்தில் ஸ்கந்தவரோதயாவின் பந்தெறிவீரர்களானவடிவேலு 90 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும் சம்பந்தர் 78 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும், விமலானந்தன் 64 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், ராதாக்கிருஷ்ணன் 42 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3 விக்கட்டுகளையும் விழ்த்தினார்கள். இதையடுத்து ஸ்கந்தவரோதயா தனது முதலாவது துடுப்படி ஆட்டத்தை ஆரம்பித்தது. சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 64 ஓட்டங்களையே ஸ்கந்தவரோதயா பெற்றது இதில் விமலானந்தா 18 ஓட்டங்களையும், றிச்சேர்ட் 20 ஓட்டங்களையும். ராமதாஸ் 9 ஓட்டங்களையும். சம்பந்தர் 7 ஓட்டங்களையும் பெற்றனர். மூன்று வீரர்கள் ஒரு ஓட்டமும்எடுக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில் சென். ஜோன்ஸ் பந்தெறி வீரர்களான சூரியகுமார் 12 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளையும், சுகுமார் 9 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும், தெய்வேந்திரா 18 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 5 விக்கட்டுகளையும், வைரவப்பிள்ளை 17 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கட்டையும் வெற்றிகரமாக வீழ்த்தினார்கள். ஓட்டங்கள் போதாதகாரணத்தினால் மீண்டும் ஸ்கந்தவரோதயாவே துடுப்பெடுத்

(6-ம் பக்கம் பார்க்க)


போன்-7213

பெட்டா பார்மஸி

ஆங்கில மருந்துகளுக்கு

23, டாம் வீதி, கொழும்பு. 12

Estd: 1929 **S. R. S.** போன்: 296

**ஜவுளி மாளிகை**

**மலிவு விலைகளில் கைத்தறி ஜவுளிகள்**

| | |
|---|---|
| 100-ம் நம்பர் 6 யார் கைத்தறி சேலைகள் | 17-50 |
| 6 யார் லங்கா கலர் சேலைகள் | 10-50 |
| லங்கா கலர் பப்ளின் | 1-40 |
| 4 முழம் மில் கதர் வேட்டி | 4-75 |
| நெசவு கதர் தூவாய்கள் | 2-00 |

இவைகளும் - மற்றும் உங்களுக்குத் தேவையான எல்லாவித ஜவுளிகளும் மலிவு விலைகளில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். ஆர். செல்லத்துரை**

216, கே. கே. எஸ். ரோட், — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் பென்ஷன் வெட்டை நீக்க எம். பி. கோரிக்கை

சுழிபுரம், ஞாயிறு

கடந்தமாதம் இலங்கையிலுள்ள சிங்கப்பூர் விதவைப் பென்ஷன் பணம்பெறும் விதவைகள் தாம் வழமையாகப் பெறும் விதவைகள் பணத்தில் மூன்றில் ஒரு பங்கைக் குறைவாகப் பெற்றுள்ளதால் இவர்கள் மிகவும் கஷ்டம் அடைந்துள்ளதாகவும் இவர்களின் நிலைமையை நன்கு விளக்கிப் பென்ஷன் வெட்டை நிறுத்தி வைக்குமாறு மலேசிய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டும் எனவட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. அ. அமிர்தலிங்கம் நிதி அமைச்சர் திரு. வன்னிநாயக்காவைக் கேட்டுள்ளார். நிதிஅமைச்சர் திரு. வன்னி நாயக்கா மலேசிய அரசாங்கத்துடன் தொடர்புகொண்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

---

## காசோலையில் மோசடி!

கொழும்பு, ஞாயிறு

காசோலைகள் மூலம் பெரும் மோசடி நடைபெற்று வருவதை இரகசியப் பொலிசார் கண்டுபிடித்திருப்பதாயும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் பெரும்பாலும் புறக்கோட்டை வர்த்தகர்கள் என்றும் கூறப்படுகிறது. இதுசம்பந்தமாக அநேகர் கைது செய்யப்பட்டிருப்பதாயும், ஏற்கனவே பலர் சிறைவைக்கப் பட்டிருப்பதாயும் மேலும் கூறப்பட்டது.

---

## இலவச வகுப்புகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

வாணிக்கலைக்கழகத்தின் இலவச சைவப்புலவர் வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

---

## ஏடனில் புதுக்குழப்பம்

ஏடன், பெப். 27

ஏடனில் புதிய குழப்பம் ஏற்பட்டிருப்பதாயும், பொதுவேலைநிறுத்தம் நடைபெறவிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.


REGAL--JAFFN
NOW SHOWING
Audie Murphy
in
TO HELL AND BACK
(Cinemascope- color) Warfilm)

நியூ காலிங்கன்
(இனுவில்)
தினசரி-6-30, 9-30 மணி
விடுமுறை நாட்களில் 2-30 மணி
ஜெமினி - சரோஜா தேவி
நடித்த
கல்யாண பரிசு

ராஜா
(யாழ்ப்பாணம்)
6-30, 9-45க்கு மட்டும்
பொலிஸ்காரன் மகள்
தினசரி 4-15க்கு மட்டும்
பிறிமிடிவ் லண்டன்
(வயது வந்தவர்கட்கு மாத்திரம்)

இப்பொழுது திரையிடப்படுகிறது
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (அட்டன்) வெலிங்டன் (யாழ்ப்பாணம)



நாகேஷ் - கே. ஆர். விஜயா
முத்துராமன், எஸ். ராமராவ், காஞ்சனா
நடித்த
சர்வர் சுந்தரம்


## கூட்டுறவு இயக்கத்தின் உதவி

உடுப்பிட்டி, ஞாயிறு

"இலங்கையில் கூட்டுறவு இயக்கம் 1911-ல் ஆரம்பித்தது. இன்றுவரை இந்த இயக்கம் மகத்தான பல வெற்றிகளை ஈட்டியுள்ளது. இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் பொதுமக்களுக்குத் தேவையான உப உணவுப் பொருட்களை வழங்குவதற்கு அரசாங்கம் கூட்டுறவு இயக்கங்களின் உதவியையே நாடியது. பொதுமக்களுக்குக் கலப்படமற்ற பொருட்களை நியாயமான விலைக்கு வழங்குவதற்காகவே கூட்டுறவுக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவின் நன்மைகளைப் பொதுமக்கள் புரிந்துகொண்டு அதன் வளர்ச்சிக்காக ஒத்துழைக்க வேண்டும். கூட்டுறவு இந்நாட்டுயர்வு என்பதை எவரும் மறக்கக்கூடாது."

இவ்வாறு யாழ். கூட்டுறவுப் பயிற்சிக் கலாசாலைப் போதனாசிரியர் திரு. பி. கோவிந்தசாமி கொக்குவிலில் உள்ள யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் மன்றத்தில் "கூட்டுறவு இயக்கம்" என்பது குறித்து. விசேஷ சொற்பொழிவாற்றுகையில் கூறினார்.

இக் கூட்டத்திற்குச் செல்வன் பொ. திருநாவுக்கரசு தலைமை வகித்தார். செயலாளர் செல்வன் எஸ். சிவபாதசுந்தரம் நன்றி கூறினார்.

---

## சென். ஜோன்ஸுக்கு..

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தாடவேண்டி ஏற்பட்டது. இத்தடவை ஸ்கந்தவரோதயா சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 73 ஓட்டங்களைபெற்றது. இதில் விமலானந்தா 46 ஓட்டங்களும், றிச்சேர்ட் 7 ஓட்டங்களும், துரைசிங்கம் 9 ஓட்டங்களும், கந்தசாமி ஆட்டத்தை இழக்காமல் 5 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் நால்வர் ஒரு ஓட்டமும் எடுக்கவில்லை இச்சந்தர்ப்பத்தில் சென். ஜோன்ஸ் பந்தெறி வீரர்களான தெய்வேந்திரா 16 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 2 விக்கட்டுகளும் சூரியகுமார் 27 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கட்டுகளையும், சுரேந்திரா 21 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 3விக்கட்டுகளையும் வெற்றிகரமாக வீழ்த்தினார்கள். இப்போட்டி முடிவில் சென். ஜோன்ஸ் கல்லூரி ஒரு ஆட்டத்தினாலும் 139 ஓட்டங்களினாலும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியைத் தோற்கடித்தது.

இப் போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

---

## கல்லூரிகள் . . .

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

தால் நியமிக்கப்படவிருக்கும் விவசாய ஆசிரியர் நியமனத்தின் போது இங்கு ஒன்றுக்கு மேற்பட்டவரை நியமனம் செய்யுமாறு வேண்டியுள்ளேன். இக்கிராமத்தில் உள்ளஓர் பெண்கள்கல்லூரியும் இந்துக்கல்லூரியும் இரு கண்கள்போல் இக்கிராமத்துக்கு விளங்குகின்றன அரசாங்கத்தின் உதவியுடனும் மக்களிடம் இருந்து சேர்க்கப்பட்ட பணத்தையும் கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்காக அரும்பாடுபடும் இப்பழைய மாணவர் சங்கம்போல்ஒவ்வொருகிராமத்திலும் பழைய மாணவர் சங்கங்கள் முன்வரவேண்டும்.

கதம்ப நிகழ்ச்சிகள் இறுதியில் நடைபெற்றன.

---

## நாகாலாந்து-சமாதான கமிஷனிலிருந்து நாராயண் ரஜினமா

### நம்பிக்கையிழந்துவிட்டதாய்க் கூறுகிறார்

ஜெய்ப்பூர், பெப். 27

நாகாலாந்து சமாதானத் தூதுகோஷ்டியிலிருந்து ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் ராஜினமா செய்துவிட்டார். நிருபர்கள் மகாநாடு ஒன்றில் நாராயணன் இத்தகவலை அறிவித்தார்.

தான் இவ்விடயம் பற்றி அதிகம் சொல்லவிரும்பவில்லை என்றும், கடந்த 17-ம் திகதி டில்லியில் பிரதமர் இந்திராவைச் சந்திக்கவிருந்த நாகா தலைவர்கள் தம் மீது நம்பிக்கையிழந்துவிட்டதாகத் தெரியவந்ததாலேயே தாம் ராஜினமா செய்ததாயும் நாராயண் கூறினார்.

நாகாலாந்து சமாதானக் கமிஷனில் திரு. நாராயண். அஸ்ஸாம் முதல் மந்திரி திரு. பி. பி. சாலிஹா. பிரிட்டிஷ் மதபோதகர் வண. மைக்கேல்ஸ்காட் ஆகியோர் அங்கத்தினர்கள்.

---

## நாட்டிலும் நகரிலும்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

புக் கரைவிட்டு அசல் கதர் வேட்டிகள் போல விற்கிறார்கள். ஏமாந்தவர்கள் அவற்றை இந்திய வேட்டிகள் என்று நினைத்து வாங்கிக் கொண்டுபோய் விடுகிறார்கள். விரித்துப் பார்த்த போது தான் அவற்றின் போலித்தன்மை அம்பலமாகிறது; அதுமட்டுமல்ல, கரைகளுக்கு இடப்படும் மையில் ஒருவித அமிலம் சேர்த்திருப்பதால் அந்த வேட்டிகள் கரைப்பக்கமாக தும்பு தும்பாய் இற்றுப் போய்விடுகின்றன.

- வழிப்போக்கன்

---

## கழுத்தில் கயிறு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தின் முன் திரண்டதாகவும் நிலைமை மோசமாகக் கூடுமென்பதை அறிந்த ஒருவர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அமிர்தலிங்கத்துக்குத் தகவல் கொடுத்தாராம்.

### எம். பி. தலையீடு

பொலிஸ் நிலையத்துக்கு விரைந்துவந்த திரு. அமிர்தலிங்கம் உண்மையை விசாரித்து, தாம் தகுந்த நடவடிக்கை எடுப்பதாக அங்கு குழுமி நின்ற மக்களுக்கு ஆறுதல் கூறி அவர்களைக் கலைந்து செல்லும்படி கேட்டார். இதன்பின் திரு. அமிர்தலிங்கம் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்ரின்டனுக்குத் தகவல் கொடுத்தார். உதவிப் பொலிஸ் சுப்பிரின்டென்ட் ஸ்தலத்துக்கு வந்து விசாரணை செய்ததுடன் நிச்சாம் என்ற இடத்துக்கும் சென்று விசாரணை செய்தார்.

பொலிசாரினல் கைது செய்யப்பட்டவர்கள்இன்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமெனக் கூறி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

(ந நி.)

---

## நாட்டின் அபிவிரு . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் இந்த இளைஞர்களிலிருந்து எவ்வளவோ விஞ்ஞானிகள், திறமைவாய்ந்த சித்திரக்காரர்கள், சிற்பிகள் தோற்றக்கூடும். எனவே இளைஞர்களை நாம் நல்லமுறையில் வழிப்படுத்த வேண்டும். நாம் அவர்களை எந்தவிதத்தில் வழிப்படுத்துகின்றோமோ அந்த வழியில் தான் அவர்களது வளர்ச்சி ஏற்படும்."

இம்மகாநாட்டுக்கு முன்னள் வடபிரதேச உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் தலைமை தாங்கினர்.

---

## தபால் தாமதம்

சுழிபுரம், ஞாயிறு

இப்பகுதியில் கடந்த பல தினங்களாக தபால் கடிதங்கள் அதிகம் தாமதித்துக் கொடுக்கப்பட்டுவருவதாக அறியப்படுகிறது. இதனல் தினமும் கடிதத்துக்காகப் பல மணி நேரமாகத் தாமதித்திருக்கவேண்டிய நிலைமை இங்குள்ள பொதுமக்களுக்கும் பல பொதுஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. முன்பு காலை 7 மணிக்கு வந்துசேரும் மெயில் பஸ் வண்டி இப்போது அநேகமாக 10 மணியளவில்தான் வந்துசேருவதாக அறியப்படுகிறது

---

## பர்மிய பட்டதாரிகள்

புதுடில்லி, பெப். 27

பர்மாவிலுள்ள மாண்டலே பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவர்களை, இந்திய பல்கலைக் கழக பட்டத்திற்குச் சமமாகமத்திய அரசாங்க வேலைகளுக்கு அங்கீகரிக்க முடிவுசெய்யப்பட்டிருக்கிறது.


தேவை

எமது போசனசாலையில் சமையல் செய்வதற்கு ஒருவரும், சப்ளை செய்வதற்கு இருவரும் தேவை. அனுபவம்வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. பாலசிங்கம் போசனசாலை 37, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1978

விளம்பரம்

வர்த்தகர்களே வணக்கம்!

1929-ம்ஆண்டு துவக்கம் கடை ஆரம்பம். உணவுச் சாமானுடன் கயிறுவகை, தேடாமுறுக்கு கயிறு, தும்புத்தடிவகை, ஈக்குத்தடி. பொதுவாக தும்பினல் செய்யப்பட்ட சாமான்களும் கடையில் விற்பனைக்குண்டு. வந்து பார்வையிட்டு எங்களை ஆதரியுங்கள். 36வருட அனுபவம். நல்லரகம், குறைந்தவிலை. போன்: 420. விலாசம்: 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். மு. குமாரசாமி


## மரண அறிவித்தல்

திரு. ச. பி. துரையப்பா அவர்கள் (யாழ்நகரில் பிரசித்திபெற்ற புளக்மேக்கர்) காலமாகிவிட்டார். இவர், ரோஸலின் அவர்களின் அருமைக் கணவரும், மைக்கேல் (மைக்கா பிறேமிங், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்), சென் ரோஜ் (ஆசிரியர், சென்பற்றிக்ஸ், யாழ்ப்பாணம்), எலிஸபெத், திரேசம்மா, பிலோமினு, பாரீபரு, மேரி மெக்டலின் ஆகியோரின் அருமைத் தந்தையும், எஸ். வி. அந்தோனிப்பிள்ளை (ரிச்சர்ட் பீரிஸ், கொழும்பு), ம. எட்வேட் (தந்தி இலாகா, முல்லைத்தீவு), தி. அருள்நாயகம் (தந்தி இலாகா, யாழ்ப்பாணம்), சி. ஜீவரத்தினம் (யா. க. நி.-சங்கம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமனருமாவர். அன்னரது பூதவுடல் இன்று பிற்பகல் 5 மணிக்கு யாழ்ப்பாணம் ஆசனக்கோவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். 1983

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேலை வீதி, [illegible] இலக்கத்திலுள்ளஅவர்கள அச்சகத்தில் 1966-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org